சி.சி எண்.136/2022 நாள்: 06.05.2024

அ.சா. 4 சின்னத்தம்பி

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை:**

1. எனது சொந்த ஊர் வேலாவயல். எனது ஊருக்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 30 கி.மீ. தூரம் இருக்கும். எனது மகள் கல்லுக்கால் ஊன்ற வேண்டும் என்று சொல்லிதான் என்னை அழைத்தார். பக்கத்து வீட்டுக்காரர் பிரச்சனை செய்கிறார் வாங்க என சொன்னார் என்றால் இல்லை. இடம் சம்மந்தமாக அளந்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியும்.

2. கல்லுக்கால் ஊன்றுவதற்க வேறு ஆள் நபர்கள் இல்லை என்றால் சரிதான். போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். ஒருமுறை விசாரித்தார்கள். சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 08.00 மணியளவில் நான் அ.சா.1 வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்போது 1முதல் 3 வரையிலானவர்கள் இருந்தார்களா என்றும், இடத்தை அளந்த சர்வேயரையும் 1வது எதிரி விரட்டிவிட்டார் என்றும், அதன் பின்னர் வேலி கட்ட முடியவில்லை என்று அ.சா.1 சொல்லிக்கொண்டிருந்தார் என்றும், அப்போது 1வது எதிரி வந்து வேலி ஏன் கட்டுகிறீர்கள் என அசிங்கமான வார்த்தகளால் திட்டினார் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை.

3. 1வது எதிரி மற்றும் அ.சா.1ன் கணவர் பங்காளிகள் என்றும், ஊர்க்காரர்கள் என்பதாலும் சற்று ஒதுங்கியே இருந்தேன் என்றும், அதன்பின்னர் என்னால் தாங்கமுடியாமல் விலக்கசென்றேன் என்று போலீசார் விசாணையில் சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. கல்லுக்கால் ஊன்ற போகும் போது எனது மருமகன் அங்கு இல்லை. எனது பேத்தியும், எனது மகளும் தான் 1வது எதிரியை அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், அதற்காக தேவகோட்டை அரசு மருத்துவமனையில் 1வது எதிரி சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல.

4. அ.சா.1 பின்னிட்டு பொய்யாக கொடுத்த புகாருக்கு ஆதாரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u> இல்லை.**

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.